

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2026) மதுரையில் 50 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட வண்டியூர் பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ. வெங்கடேசன், மு. பூமிநாதன், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2026) மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில், 1.536 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில், 10 இலட்சத்து 93 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலான 867 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்து, 50 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட வண்டியூர் பூங்கா மற்றும் 1 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, வெங்கடேசன், மு.பூமிநாதன், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2026) மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள HP கணினி திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்து மாணவியர்களிடம் உரையாடினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன். சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, அ. வெங்கடேசன், எம். பூமிநாதன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவநீத், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் வானதி, கல்லூரி கல்வி இணை இயக்குநர் (மதுரை மண்டலம்) முனைவர் வெ. கலைச்செல்வி, ICT அகாடமி முதன்மை செயல் அலுவலர் வி. ஸ்ரீகாந்த், HP இந்தியா சேல்ஸ் நிறுவனத்தின் தெற்கு மண்டல விற்பனைத் தலைவர் ஜி. சந்திரமௌலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எதிர்க்கட்சிகள் கொடுக்கக்கூடிய நெருக்கடிகளை சமாளித்து

# தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கை எட்டியிருக்கிறோம்!

## சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

சென்னை, பிப்.23–

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில்எதிர்க்கட்சி யினர் பேசியபோது குறுக்கிட்டு நிதிஅமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:

ஒட்டுமொத்தமான வளர்ச்சியை வைத்துத்தான் நாம் தற்போது தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு துறையும் contribute செய்கிறது. சில சமயங்களில் ஒவ்வொரு துறைகளில் குறைகின்றன. மேலும் பார்த்தால் உற்பத்தித் துறை அதிகமாக contribute செய்கிறது. காரணம், நம்மிடம் இருக்கக்கூடிய அதிக அளவிலான தொழிற்சாலைகள். அவற்றின்மூலமாக நடைபெற்றிருக்கக்கூடிய பொருளாதார நடவடிக்கைகள். உற்பத்தித் துறையினை யும் தாண்டி இம்முறை சேவைத் துறையும் நமக்கு கை கொடுத்திருக்கிறது. எனவே, பல்வேறு துறைகளை இணைத்துப் பார்க்கிறபோது, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியைத்தான் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



வேளாண்மைத் துறையின் உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில், கொடுக்க வேண்டிய GDP–க்கான வளர்ச்சிக்கான முயற்சிகளை நாம் முழுமையாக எடுத்திருக்கிறோம். அவை குறித்த முழு விவரங்களை நம்முடைய வேளாண்மைத் துறை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

ஒரு வாதத்திற்காக நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டாலும் கூட, அப்படிப் பார்த்தால், "விவசாயத்தில் நீங்கள் குறைந்து வருகிறீர்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள் அல்லவா? அப்படியானால், நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, விவசாயத்தில் நீங்கள் வளர்ச்சியை குறைவாக வைத்து எந்தவித முன்னேற்றமும் காட்டாமல் இருந்ததுதான் அதற்கு சரியான பதிலாகவும் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் விவசாயத்தில் இதேபோன்ற ஒரு முன்னேற்றத்தைக் கண்டு, இதே விவசாயம், முதன்மைத் துறை கொடுத்திருக்குமே என்று சொன்னால், இப்போது அது வந்திருக்க வேண்டுமல்லவா? எனவே, உற்பத்தித் துறையில் இந்த ஆட்சி இன்றைக்கு செய்திருக்கின்ற இந்த சாதனையை, நாங்கள் ஏற்பதில், நீங்கள் பங்கு கேட்பதைப்போல், நீங்கள் சொல்லக்கூடிய வகையில், முதன்மைத் துறையான விவசாயத் துறையில் குறைந்ததற்கும். நீங்கள் ஆட்சியில் இருந்தபோது நீங்கள் எடுக்காத நடவடிக்கைகள்தான் அதற்குக் காரணமாக இருக்கிறது என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

எதிர்க்கட்சித் தலைவர் தற்போது உண்மையை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் என்ன சொல்கிறார் என்றால், "நீங்கள் இப்போது இந்த ஆண்டு உச்சபட்சமாக இந்தியாவில் 11.19 சதவிகிதத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்றும் உண்மையை ஒத்துக் கொள்கிறார்கள். நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் விளம்பரங்களைச் செய்ய வேண்டியதில்லை. உண்மை நிலையைச் சொல்கிறோம். உண்மையை உரக்கச் சொல்கிறோம். மக்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, நிதி அமைச்சர் அவர்கள் சமாளிக்கிறார் என்று சொன்னார் . நிதி அமைச்சர் அவர்கள் வாதங்களை சமாளிக்கவில்லை. நிதி அமைச்சராக இருந்தாலும் சரி, இந்த அரசாக இருந்தாலும் சரி. நீங்கள் கொடுக்கக்கூடிய நெருக்கடிகளை நாங்கள் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இவ்வளவு பெரிய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். நாட்டு மக்களுக்கான உட்கட்டமைப்பு திட்டங்களாக இருந்தாலும் சரி, சமூக திட்டங்களாக இருந்தாலும் சரி இந்தத் திட்டங்களுக்கான நிதியை திரட்டி தருவதிலே நீங்கள் கொடுக்கக்கூடிய இந்த நெருக்கடிகளை சமாளித்துதான் இந்த ஆட்சியை நாங்கள் திறம்பட நடத்திக் கொண்டிருக்கிறோம், ஒன்று.

இன்னொன்று, நீங்கள் சொன்னீர்கள் இந்த வளர்ச்சி. வராத பிள்ளைக்கு பெயர் வைப்பதைப் போல, இந்த வளர்ச்சியில் எந்தவொரு பங்களிப்பையும் செய்யாத நீங்கள் இந்த 11.19 சதவிகித வளர்ச்சியை ஆட்சிப் பொறுப்பிற்கு நாங்கள் வந்ததற்கு பிறகு சாத்தியப்பட்டிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் இருந்தபோதுதான், அவருடைய ஆட்சிக்

காலத்தில்தான் முதன் முறையாக இரண்டு இலக்க வளர்ச்சி வந்தது. அதற்கு பிறகு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சியில்தான் இரட்டை இலக்க வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம் என்று சொல்வதுகூட, நீங்கள் கூட்டணி வைத்திருக்கக்கூடிய பா.ஜ.க. மத்திய அரசுதான் சொல்கிறதே தவிர, அந்தப் பெருமையைக்கூட நாங்கள் சொல்லவில்லை. வேறு வழியில்லை. அவர்களாகவே ஒப்புக்கொண்டிருக்கி றார்கள். இது ஒன்றிய அரசே ஒப்புக்கொண்டி ருக்கக்கூடிய புள்ளி விவரமே தவிர வேறு அல்ல.

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்து பேசினார்.

### நீர்நிலை புறம்போக்கு பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு

# அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி வழங்கிட நடவடிக்கை!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதில்

சென்னை, பிப்.23-

சட்டப்பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் 40,50 ஆண்டு காலமாக குடியிருப்பவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-

சிதம்பரம் தொகுதி, மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம் - சி. முட்லூர் ஊராட்சியில் புயல் பாதுகாப்பு மையம் அமைக்க அரசு முன்வருமா? என்று கே.ஏ. பாண்டியன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அளித்த பதில் வருமாறு:-

பேரிடர் காலங்களில், சி.முட்லூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 500 நபர்களும் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்



3,000 நபர்களும் தங்க வைக்கும் அளவிற்கு இடவசதி உள்ளது.

மேற்கண்ட பள்ளி மற்றும் கல்லூரி ஆகியவை தற்காலிக புயல் பாதுகாப்பு மையமாக பயன்படுத்தப் பட்டு வருகின்றன. சி.முட்லூர் கிராமத்திற்கு அருகில் 6 கி.மீ. தொலைவில் தில்லைவிடங்கன் தெற்கு மற்றும் புஞ்சைமகத்து வாழ்க்கை கிராமங்களில் உள்ள பல்நோக்கு பாதுகாப்பு மையங்களில் (Multipurpose Evacuation Shelters) சுமார் 4,000 பொது மக்கள் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது. எனவே, தற்போதைய நிலையில் சி.முட்லூர் கிராமத்தில் புயல் பாதுகாப்பு மையம் அமைக்க வினா எழவில்லை.

உறுப்பினர் அவர்களுடைய கவலையை நான் மனதிலே ஏற்றுக்கொண்டு, அரசினுடைய நிதி நிலைக்கு ஏற்றாற்போல் அதற்கு வேண்டிய தகுந்த ஏற்பாடுகளை செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல பல இடங்களில் நீர்நிலை புறம்போக்கு பகுதிகளில் நிறைய மக்கள் 40, 50 ஆண்டு காலமாக குடியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வீடுகள் வழங்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல எதிர்காலத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடங்களைக் கட்டி, அவற்றை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் .

எனது பாபநாசம் தொகுதியில் கொள்ளிடத்தின் கரையிலே கோவிந்தநாட்டுச்சேரி, சருக்கை, சத்தியமங்கலம், திருவைக்காவூர் ஆகிய ஊராட்சிகள் இருக்கின்றன. கொள்ளிடத்திலே வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது குடியிருப்புகளிலே தண்ணீர் போகக்கூடிய நிலை ஏற்படுகிறது. எனவே, இந்த பகுதியில் வெள்ள நேரத்திலே மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு ஒரு பேரிடர் மையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

உறுப்பினர் அவர்களுடைய கவலையை நான் புரிந்திருக்கிறேன். உடனடியாக அரசு அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பி, அதனை ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஆ.நா.பார்த்திபன் தலைமை! துறைமுகம் கிழக்குப் பகுதி சார்பில்

# முதல்வர் பிறந்தநாள்: தயாளு அம்மாள் பயிற்சிப் பள்ளியில் நல உதவிகள்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., திரைக்கலைஞர் சுகாசினி மணிரத்தினம் வழங்குகின்றனர்!

சென்னை,பிப்.23–

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் கிழக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா 12, திராவிட உணர்வை சேர்த்து வைப்போம்! செந்தமிழ் மகுடம் சூட்டி வைப்போம்! எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்டம் இன்று (23.2.2026 – திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, பாரிமுனை, பின்னிமில் வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், 60அ வட்ட கழக செயலாளர் ஆ.நா.பார்த்திபன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், எம். விஜயகுமார், ஜி.மகாதேவன், பி.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, NPM.சேக் அப்துல்லா, எம். இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பா. ஜெகதீஷ், வி.விஜயகுமார், எம்.வினாயகம், பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், நா. ரஞ்சித் விஜயாலயன், வெ.பரிமஎம், எல்.நவீன் எம்.சி, ராஜேஷ்ஜெயின்எம்.சி முன்னிலை வகிக்கின்றனர்.

ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப. ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார், எஸ்.எம். ஹாஜி, வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், த.கதிரவன், ம.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி. சதீஷ்கமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில், தயாளு அம்மாள் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு தையல் இயந்திரம் மற்றும் சான்றிதழ் வழங்குபவர் – கழக கல்வியாளர் அணிச் செயலாளர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, திரைக்கலை ஞர் சுகாசினி மணிரத்தினம் ஆகியோர் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழக இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் திரு.தயாநிதிமாறன் எம்.பி, தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் Ex.MLA, ஜலிலுதீன், த.பன்னீர்செல்வம், எம்.ஜெயவேல், எஸ்.முருகம்மாள், ஒய்.நாசர், ஆர். அன்பு, முகமது முக்தார், க.கதிரவன், சி.ஆர்.பிரபு, ரவிக்குமார், A. மகேந்திரன், எம்.முஹம்மதுரவி, எம்.பி.ஏழுமலை, இ.இராஜேஸ்வரி, G.M.D. மணிகண்டன், கே.அண்ணாதுரை, D.டில்லிகுமார், S. குணசேரன், கே.எட்வர்ட்கென்னடி, எஸ்.மொகுதும் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

60வது வட்ட கழக செயலாளர் க.கவியரசு நன்றி கூறுகிறார்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டு,ஆர்.சி.தெருவில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்க கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார்.உடன் எட்டையாபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன், ஒன்றிய செயலாளர்கள் நவநீதகண்ணன், ராதாகிருஷ்ணன், அன்புராஜன், இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

